**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 24.08.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு சிறந்த நிறுவன விருது**

வேளாண்மைக்கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கக்கல்வி, வேளாண் வணிகமேம்பாடு, வேளாண்கொள்கை, உணவு உற்பத்தியின் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளல் மற்றும் விவசாயத்தை இலாபகரமாக நடத்த தேவையான திறன்மேம்பாட்டினை திறந்த மற்றும் தொலைதூரக்கல்வி மூலம் அளித்தல் ஆகியவை 1876 ஆம் ஆண்டு சைதாப்பேட்டையில் ஒருவேளாண் பள்ளியாக தொடங்கப்பட்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆறுதலையாய பணிகளாகும். 1906 ஆம் ஆண்டு இப்பள்ளி, கோயம்புத்தூர் வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமாக மலர்ந்து பின்னர் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமாக தரம் உயர்த்தப்பட்டது.

இப்பல்கலைக்கழகமானது அகில இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழகத்தால் வெளியிடப்பட்ட தரவரிசைப்பட்டியலில் இந்தியாவில் உள்ள வேளாண்மைப் பல்கலைக்கழகங்களுக்குள் நான்காவது இடத்தை பெற்றுள்ளது.

விவசாயக்கல்வி, விரிவாக்கம் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான 50 ஆண்டு கால பங்களிப்பை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த நிறுவன விருது அகில இந்திய வேளாண்மை மாணவர் சங்கத்தால் (AIASA) வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழகம் மற்றும் அகில இந்திய மாணவர் சங்கம் இணைந்து பெங்களூரில் உள்ள வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தில் ஆகஸ்ட் மாதம் 22ஆம் தேதியன்று நடந்தப்பட்ட 'வேளாண்மை மற்றும் உணவு முறையின் முன்னேற்றங்கள் மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகள்' குறித்த சர்வதேச மாநாட்டில் அளிக்கப்பட்டது.

இவ்விருது வருடத்திற்கு 6000த்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு விவசாயம் மற்றும் அதன் தொடர்புடைய துறைகளில் கல்வி அளித்ததற்கும், 850க்கும் மேற்பட்ட உயர்விளைச்சல் பயிர் இரகங்கள் மற்றும் 1500க்கும் மேற்பட்ட வேளாண் தொழில்நுட்பங்களை வெளியிட்டு

தமிழ்நாட்டின் உணவு தானிய உற்பத்தியை 120 இலட்சம் டன்களுக்கு மேல் அதிகரித்தமைக்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு இவ்விருது வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**